செ.வெ.எண் : 20 /அக்டோபர்　　　　　　　　　　　　　　　　　　நாள் : 14.10.2020

## இராமநாதபுரம் மாவட்டம்

## மின்னல் தாக்கி மரணம் அடைந்தவரின் குடும்பத்தாருக்கு ரூ.4 இலட்சம் நிவாரண உதவித் தொகை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் இன்று (14.10.2020) மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.கொ.வீர ராகவ ராவ்,இ.ஆ.ப., அவர்கள், மின்னல் தாக்கி மரணம் அடைந்தவரின் குடும்பத்தாருக்கு பேரிடர் நிவாரண நிதியாக ரூ.4 இலட்சத்திற்கான காசோலையை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், கலையூர் கிராமத்தைச் சேர்ந்த திரு.சி.இராமநாதன் என்பவர் கடந்த 30.04.2020 அன்று இடி, மின்னல் தாக்கி மரணமடைந்தார். இதனையடுத்து, அன்னாரது குடும்பத்தாருக்கு நிவாரண உதவியாக மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.4 இலட்சத்திற்கான காசோலையை தாயார் புஷ்பம் என்பவரிடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் இன்று வழங்கினார்.

மேலும், இராமநாதபுரம் வட்டம், சக்கரக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு.எம்.நாகராஜன் (சுதந்திர போராட்ட தியாகி) என்பவர் கொரோனா வைரஸ் தொற்று பாதிக்கப்பட்டு குணமடைந்ததாகவும், தற்போது வாழ்வாதாரத்திற்கு சிரமப்படுவதாகவும், உதவி வேண்டி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களை நேரில் சந்தித்து கோரிக்கை மனு வழங்கினார். இதனையடுத்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உடனடியாக மாவட்ட ஆட்சியரின் விருப்புரிமை நிதியிலிருந்து ரூ.20 ஆயிரம் நிவாரணமாக வழங்கிட உத்தரவிட்டு அதற்கான காசோலையை அன்னாருக்கு வழங்கினார்.

இந்த நிகழ்வுகளின்போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஜி.கோபு, சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.எஸ்.சிவசங்கரன், பரமக்குடி வட்டாட்சியர் திரு.செந்தில்வேல்முருகன் ஆகியோர் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**